# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 66/2017**

பெயர்: **சபரீஷ்** நாள்: 02.02.2023

வா.சா.2 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.2 – சபரீஷ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.31</u>

அசல் வழக்கை யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். வழக்கை குமாரசாமி என்பவர் சின்னையன் குடும்பத்தாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தடம் கேட்கிறார்கள், ஆனால் வரப்பு தடம் மட்டுமே உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கான நிலங்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியும். அந்த நிலங்கள் அவர்களுக்கு எவ்வகையில் பாத்தியம் என்ற விபரம் எனக்கு தெரியும். குமாரசாமிக்கு பாகப்பிரிவினை ஆவணம் மூலம் வழக்கு சொத்து சொந்தமானது ஆகும். வழக்கு சொத்திற்கு மேற்கு புறமாக பச்சியம்மன் கோவிலுக்கு செல்லும் பாதை உள்ளது என்றால், சரிதான். அந்த ரோட்டிற்கு கிழக்கு புறத்தில் வாதியின் நிலம் உள்ளது. வாதியின் நிலத்திற்கு அடுத்தாற்போல் கிழக்கு பகுதியில் ஒரு கிணறு உள்ளது என்றால், சரிதான். அந்த கிணறு பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்று சொன்னால், வாதி மற்றும் வேறு ஒருவருக்கு அந்த கிணறு பாத்தியப்பட்டதாகும். கிணறு வாதி மற்றும் வேறு ஒருவருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ளது. அந்த கிணற்றில் பிரதிவாதிகளும் தண்ணீர் எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. கிணற்றை ஒட்டியவாறு பிரதிவாதிகளின் வீடுகள் உள்ளது என்றால், சரிதான். கிணறானது பிரதிவாதிகளுக்கும் பொது பாத்தியமானது என்று சொன்னாலும், நான் பொய்யாக வாதி மற்றும் மற்றொருவருக்கு பாத்தியப்பட்டது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. தற்போது சாட்சி வாதியின் நிலத்திற்கு வெளியே உள்ள கிணறு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறார். அந்த கிணற்றிலிருந்து பிரதிவாதிகள் தண்ணீரை உபயோகித்து கொள்கிறார்கள் என்றால், சரிதான்.

2) சர்வே எண் 254/1Cல் உள்ள வாதியின் நிலத்தைவிட தாழ்வாக பிரதிவாதிகளுக்கு வடபுறத்தில் நிலம் உள்ளது என்றால், சரிதான். அதன் சர்வே எண் 254/1A என்றால், சரிதான். மேற்படி கிணற்றிலிருந்து நிலத்தடி குழாய் மூலமாக சர்வே எண் 254/1Aல் உள்ள பிரதிவாதிகளின் நிலத்தில் தண்ணீர் பாய்கிறது என்றால், சரிதான். சர்வே எண் 254/1Aல் உள்ள நிலத்திற்கும், பச்சியம்மன் கோவில் செல்லும் தார் ரோட்டிற்கும் இடையே சர்வே எண் 256 நிலம் உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 256ல் பிரதிவாதிகள் மெத்தை வீடு கட்டியுள்ளார்கள் என்றால், சரிதான். பிரதிவாதிகள் சர்வே எண் 254/1Cல் உள்ள வரப்பில் சென்று வருகிறார்கள் என்று சொன்னால், எல்லோரும் சென்று வருகிறார்கள். நான் முதல் விசாரணையில் பச்சியம்மன் கோவிலுக்கு செல்லும் பஞ்சாயத்து ரோட்டிலிருந்து எதிர்வாதிகள் இருக்கும் இடத்திற்கு செல்வதற்கு பாதை வசதி உள்ளது என்று கூறியுள்ளது, நான் கூறும் நடை தட பகுதியா அல்லது வேறு பகுதியா என்றால், வரப்பில் சென்று வரும் நடை தடத்தைதான் அவ்வாறு கூறியுள்ளேன். இதை தவிர பிரதிவாதிகளுக்கு வேறு தடம் இல்லை என்றால், சரிதான். நான் வாதியின் சகோதரரின் மகன் என்றால், சரிதான்.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.54</u>

<u>மறு விசாரணை</u>

பிரதிவாதிகள் எனக்கு மாமன் முறை ஆவார்கள். பஞ்சாயத்து ரோட்டிலிருந்து வாதி மற்றும் பிரதிவாதிகள் அவர்கள் நிலத்திற்கு நேரடியாக சென்றுவிடலாம்.

ஒப்பம் /சபரீஷ்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.